# T/KIN/MUSLIM LADIES COLLEGE
## (National School)


Grade 8

# முதலாம் தவணை மதிப்பீடு-2020
## விஞ்ஞானம் - I-II

நேரம் 2Hrs

**பகுதி – 1 சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் நுண்ணங்கி
    1. பற்றீரியா 2. வைரசு 3. புரட்டோசோவா 4. பங்கசு
02. நுண்ணங்கியினை முதன் முதலில் அவதானித்தவர்
    1. லூயிஸ் பாஸ்டர் 2. லீவன் கூக் 3. அலக்சான்டர் பிளமிங் 4. ரொபட் கூக்
03. நுண்ணங்கி செயற்பாட்டினால் நொதித்தல் நிகழும் உணவு வகை
    1. புரதம் 2. கொழுப்பு 3. காபோவைதரேற்று 4. எல்லா உணவுகளும்
04. தேமல் நோயை ஏற்படுத்தும் நுண்ணங்கி
    1. பற்றீரியா 2. பங்கசு 3. வைரசு 4. புரட்டோசோவா
05. பின்வரும் அங்கிகளில் எவ்வங்கிக்கு ஒடு கானப்படுவதில்லை
    1. நத்தை 2. சிப்பி 3. ஒக்டோபஸ் 4. சங்கு
06. சுவாசப்பை, தோல், வாய்க்குழி என்பவற்றால் சுவாசிக்கும் அங்கி
    1. ஆமை 2. சலமந்தர் 3. பாம்பு 4. நீரிஸ்
07. முள்ளந்தண்டிலிகள் அடங்காத விலங்குக் கூட்டம் எது?
    1. அனலிடா 2. நிடேரியா 3. மொலஸ்கா 4. மமேலியா
08. பறவைகளின் இயல்புகளில் ஒன்று
    1. வேகமாக பறக்கும் 3. உடல் முழுவதும் மயிர் காணப்படுதல்
    2. பிற்பக்க செட்டை காணப்படுதல் 4. ஓடுள்ள முட்டையிடுதல்
09. ஓடிகள், உறிஞ்சிகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரங்கள் முறையே
    1. சுதைகரைச்சான், புளியாரை 3. அடம்பன் கொடி, வாழை
    2. நெல், கோரை 4. வல்லாரை, புளியாரை



10. அருகில் காட்டப்பட்ட இலை ஒழுங்கமைப்பு
    1. எதிரான ஒழுங்கு 3. ஒன்றுவிட்ட ஒழுங்கு
    2. சுருளியுருவான ஒழுங்கு 4. வட்டவுருவான ஒழுங்கு
11. ஆவியுயிர்ப்பு மூலம் தாவரத்தில் இருந்து வெளியேறுவது
    1. நீராவி 2. கனியுப்பு 3. பிசின் 4. நீர்
12. தாவரங்களில் ஒளித்தொகுப்பின் போது உருவாகும் பிரதான விளைபொருள்
    1. சுக்குரோசு 2. பிரக்டோசு 3. மோல்டோசு 4. குளுக்கோசு
13. தூய நீரின் கொதிநிலை
    1. 0 ºC 2. 30 ºC 3. 100 ºC 4. 150 ºC
14. மின்னைக் கடத்தும் திரவ உலோகம்
    1. நீர் 2. இரசம் 3. மதுசாரம் 4. தேன்
15. பின்வருவனவற்றுள் சடப்பொருள, சக்தி என்பவற்றுக்கு உதாரனங்கள் முறையே
    1. வளி, மின் 2. ஒலி, ஒளி 3. நீர், கல் 4. வெப்பம், பந்து


kalvi.lk

16. அடர்த்தி எனப்படுவது
   1. திணிவினதும் ஆர்முடுகளினதும் பெருக்கமாகும்
   2. அலகுத்திணிவின் கனவளவாகும்
   3. அலகுத்திணிவின் கனவளவாகும்
   4. வேலை செய்யும் ஆற்றலாகும்
17. பின்வருவனவற்றுள் எது ஒரு கலவையாகும்
   1. தூய நீர்
   2. வளி
   3. குளுக்கோசு
   4. சீனி
18. பின்வருவனவற்றுள் மீடிறனை அளக்கும் அலகு
   1. Hz
   2. $ms^{-1}$
   3. $ms^{-2}$
   4. $Kgm^{-3}$
19. அதிக மீடிறனை உருவாக்கும் இசைக்கவை

1  2.  3.   4.

20. நவீன இசைக்கருவிக்கு உதாரணமாக அமைவது
   1. தவில்
   2. பறை
   3. கிட்டார்
   4. மத்தளம்

## பகுதி - ii

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. கீழே தரப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

(கள்ளி, இரைச்சல், ஒக்டோபஸ், இழுதுமீன், தன்னீர்க்குப்பி, கிளமிடமோனசு,ˈ காபனிரொட்சைட்டு, பளபளப்பு, தவில ஒட்சிசன், நெருக்கல். 20 – 20000 Hz)

   1. அமுக்கத்தை அதிகரித்து சடப்பொருளின் கனவளவைக் குறைத்தல் ……………………………… எனப்படும்.
   2. திரவங்களின் அடர்தியை ஒப்பிடுவதற்கு ………………………………………… பயன்படுகிறது.
   3. …………………………………………… ஓலியினால் மன அழுத்தம் ஏற்பட வாய்ப்புண்டு.
   4. தசை செறிவான பாதமுடைய அங்கி ………………………………………. ஆகும்.
   5. தாவரங்களின் ஒளித்தொகுப்புச் செயன்முறைக்கு …………………………….. வாயு பயன்படும்.
   6. ………………………………… ஒரு காற்றுக் கருவியாகும்.
   7. ஒளித்தொகுப்பை மேற்கொள்ளும் நுண்ணங்கி ………………………………….. ஆகும்.
   8. மெதுசா வடிவமுடைய அங்கி ……………………………………………………. ஆகும்.
   9. தாவரங்களின் சுவாசத்திற்குப் பயன்படும் வாயு ………………………………….. ஆகும்.
   10. உலோகத்தின் இயல்புகளில் ஒன்று ………………………………………………. ஆகும்.
   11. மனிதனின் கேள்தகவு எல்லை …………………………………………………..
   12. இலைத்தொழில் தண்டையுடைய தாவரம் ……………………………………… ஆகும்.

(12 புள்ளிகள்)

02. நுண்ணங்கிகளினால் மனிதன் நன்மையையும் தீமையையும் பெற்றுக்கொள்கின்றான்.
   1. நுண்ணங்கிகள் வாழக்கூடிய தகாத சூழல்கள் 02 தருக. (2 புள்ளிகள்)


kalvi.lk

2. நுண்ணங்கி என்றால் என்ன? அதன் வகைகள் 02 தருக. (3 புள்ளிகள்)
3. நுண்ணங்கிகளை அவதானிக்க பயன்படும் உபகரணம் எது? (1 புள்ளிகள்)
4. பாத்திரமொன்றினுல் சிறிதளவு சீனி இடப்பட்டு நீர் சேர்த்துக் கரைத்து சில மணி நேரத்தின் அக்கலவை அவதானிக்கப்பட்டது.
   a. சிறிது நேரத்தின் பின் கிடைக்கும் அவதானங்கள் 02 தருக. (2 புள்ளிகள்)
   b. அவ் அவதானங்களுக்கான காரணம் யாது? (1 புள்ளி)
   c. அவ் அவதானத்திற்கான காரணமான வாயு எது? (1 புள்ளி)
   d. மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடு எக்கைத்தொழில் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது?(1 புள்ளி)
5. நுண்ணங்கியினால் மனிதனுக்கு தீமை ஒன்று தருக. (1 புள்ளி)

(12 புள்ளிகள்)

03. கீழே குறிப்பிடப்பட்ட விலங்குகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

A – ஆமை B – மண்புழு C – புறா D – வௌவால் E – தவளை F – கடலனிமனி


G – பென்குயின் H – சிம்பென்சி

1. விலங்குபாகுபாடு என்றால் என்ன? (2 புள்ளிகள்)
2. இங்கு D, H என்பன ஒரே எக்கூட்டத்தைச் சேர்ந்தது? (1 புள்ளி)
3. அக்கூட்டத்திற்குறிய சிறப்பியல்புகள் 02 தருக. (2 புள்ளிகள்)
4. ஆவேஸ் வகுப்பில் அடங்கும் அங்கிகள் 02 தருக. (2 புள்ளிகள்)
5. பரிசக்கொம்பையுடைய அங்கியைத் தருக. (1 புள்ளி)
6. தனது வாழ்கை வட்டத்தின் ஒருபருவத்தையேனும் நீரில் கழிக்கும் அங்கிகள் எவ்வாறு அழைக்கப்படும்? (1 புள்ளி)
7. மீன்களின் சுவாச அங்கம் எது? (1 புள்ளி)
8. பறக்கமுடியாத பறவையை ஒன்று தருக. (1 புள்ளி)
9. அருவிக்கோட்டு வடிவ உடலமைப்புடைய அங்கி ஒன்று தருக. (1 புள்ளி)

(12 புள்ளிகள்)

04. தாவரங்களின் பகுதிகள் பல்வேறு தொழில்களை ஆற்றுகின்றன.

1. தாவரத்தின் பிரதான 02 தொகுதிகளையும் குறிப்பிடுக. (1 புள்ளி)
2. தாவர இலையின் அமைப்பு அருகில் தரப்பட்டுள்ளது. A, B, C, D ஆகிய பகுதிகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)





3. நிலக்கீழ்த்தண்டையுடைய தாவரங்கள் 02 தருக. (2 புள்ளிகள்)
4. ஆவயுயிர்ப்பு என்றால் என்ன? (1 புள்ளி)
5. ஆவியுயிர்ப்பு பிரதானமாக தாவரத்தின் எப்பகுதியினூடாக நிகழ்கின்றது. (1 புள்ளி)
6. ஆவியுயிர்ப்பைக் குறைக்க தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங் 02தருக. (2 புள்ளிகள்)
7. வேரின் பிரதான தொழிலைத் தருக. (1 புள்ளி)


kalvi.lk

8 பின்வரும் வேர்களையுடைய தாவரங்களுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

a. மிண்டி வேர்
b. சேமிப்பு வேர்
c. காற்று வேர்
d. ஏறும் வேர் (12 புள்ளிகள்)

05. A.




தரம் 08 மாணவர்கள் சடப்பொருட்களின் துணிக்கைத் தன்மையைக் காட்டுவதற்கு P, Q. Rஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டனர். அச்செயற்பாடுகளிலிருந்து பின்வரும் அவதானங்களை பெற்றனர்.

P – வெண்கட்டி துண்டின் வழியே மை மேல் நோக்கிச் சென்றது.

Q – கொண்டிசின் ஊதா நிறம் நீரில் பரவியது.

R – ஊதுபத்தி புகையின் மணம் அறை முழுவதும் பரவியது.

1. சடப்பொருட்கள் மிகச்சிறிய துணிக்கைகளினால் ஆனவை என முதன் முதலில் முன்வைத்தவர் யார்? (1 புள்ளி)
2. a. சடப்பொருட்களின் 03 பௌதீக நிலைகளும் எவை? (1.5 புள்ளிகள்)

   b. P, Q, R எனும் செயற்பாடுகள் சடப்பொருட்களின் எப்பௌதீக நிலைகள் தொடர்ச்சியற்றவை என்பதைக் காட்டுகின்றன. (1.5 புள்ளிகள்)
3. திண்மம், திரவம் ஆகியவற்றுக்கிடையிலான ஒற்றுமைகள் 02 தருக. (1 புள்ளி)

B. சோடியம் குளோரைட்டு, செப்பு சல்பேற்று, காபன, இரும்பு, குளுக்கோசு, அசற்றிக்கமிலம், கந்தகம், அலுமினியம் போன்ற பதார்த்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. சேர்வை என்றால் என்ன? (1 புள்ளி)

2. மேலுள்ள பதார்தங்களை மூலகம் , சேர்வை என வகைப்படுத்துக. (4 புள்ளிகள்)

3. கறியுப்பின் இரசாயனப்பெயர் என்ன. (1 புள்ளி)

4. அமிலப்பதார்த்தம் 01 தருக. (1 புள்ளி) (12 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**